**CC**.**NO**.570/2023

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1, ராஜேஷ் கண்ணன், த/பெ. சண்முகம், எம்.பி.எண்.4/2024, தேதி 29.07.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் பி.இ. கம்பூட்டர் சைன்ஸ் முடித்துள்ளேன். வழக்கில் இறந்துபோனவர் எனது அப்பா ஆவார். சம்பவ சமயத்தில் எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை போலிசார் விசாரணையின்போது கொடுத்தேன். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன சண்முகம் என்பவருக்கு வயது 57. புகார் நான் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல காவலரில் ஒருவர் எழுதினார். 09.10.2023 அன்று புகார் கொடுத்தேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் பார்க்கவில்லை. நான் இருக்கும் இடத்திற்கும் கரூர் நகர காவல் நிலையத்திற்கும் இடையே 6 முதல் 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த 5 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். எனது அப்பாவின் இறப்பிற்கு காரணம் அவருடைய அஜாக்கிரதையும், கவனக்குறைவும்தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டபோது இரண்டு பக்கமும் வாகனம் வருகிறதாக என்று கவனிக்காமல் அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC**.**NO**.570/2023

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.2, ஆறுமுகம், த/பெ. பழனியப்ப கவுண்டர், எம்.பி.எண்.4/2024, தேதி 29.07.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் முதல் விசாணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்தது குறித்து அ.சா.1 க்கு ராஜா என்பவர் தகவல் சொன்னார். விபத்தில் இறந்துபோன சண்முகம் எனது நண்பர். டமார் என்று சத்தம் கேட்டவுடன் நான் பார்த்தபோது இருவரும் கீழே விழுந்துவிட்டனர். அ.சா.1 க்கு ராஜா என்பவர் தகவல் சொன்னார் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. இறந்துபோன சண்முகத்தின் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC.NO**.570/2023

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா. 3, பூபதி, த/பெ. பெரியசாமி, எம்.பி.எண்.4/2024, தேதி 29.07.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் பி.ஏ. முடித்துள்ளேன். விபத்தில் இறந்துபோன சண்முகம் அ.சா.1 ம் மற்றும் நாங்கள் ஒரே தெருவில் வசிப்பவர்கள் என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு வயது 70 இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்தது குறித்து புகார் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்தது குறித்து அ.சா.1 க்கு யார் தகவல் சொன்னார் என்று எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் கூட்டம் கூடியதா என்றால் கூடியது. டமார் என்று சத்தம் கேட்டுதான் சம்பவத்தை பார்த்தேனா என்றால் இல்லை நான் அவர் பின்னால்தான் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். இந்த விவரத்தைத்தான் நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் கரூர் - ஈரோடு நெடுஞ்சாலை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவர் பின்னால்தான் வந்தேன். விபத்தில் இறந்துபோனவர் சாலையை கடக்கும்போது இருபுறமும் வாகனம் வருகிறதா என்று கவனிக்காமல் அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்த்திருந்தால் விபத்தை பற்றிய முழு விவரமும் எனக்கு சரியாக தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்த்தேன். பார்த்தால் அடையாளம் சொல்வேன். எந்த ஊர்க்காரர் என்று தெரியாது. இறந்துபோனவர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**